# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 06 வெள்ளிக்கிழமை 22.08.2025 கதிர் 293



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## ரணில் பிணையில் விடுதலை



கொழும்பு, ஓக. 22

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கோட்டை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்வதற்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் இன்று பிற்பகல் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் பாரிய ஆயுதக் கிடங்கு!

## நீதிவான் முன்னிலையில் அகழ்வுப் பணிகள்







யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணத்தில் வீடொன்றின் வளவில் இருந்து இன்று பெருமளவான ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

கொட்டடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் மலசலகூடத்துக்குக் குழி வெட்டிய போது, சந்தேகத்துக்கிடமான பொதிகள் காணப்பட்ட மையால், அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் வந்து பொதி களைப் பார்வையிட்ட பின்னர், அவை தொடர்பில் யாழ். நீதிவான் நீதி மன்றத்துக்கு அறிவித்து, அகழ்வுப் பணிக்கு அனுமதி பெற்றனர்.

7➤

## சாமர சம்பத் 6 மணிநேரம் வாக்குமூலம்



கொழும்பு, ஓக. 22

நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத்தசநாயக்க, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத

7➤

# தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்தாதே!

## அநுர அரசுக்கு எதிராகக் கொழும்பில் போராட்டம்




கொழும்பு, ஓக. 22

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநுர அரசின் அடக்குமுறையைக் கண்டித்து நாடாளுமன்றச் சுற்றுவட்டத்துக்கு முன்பாக இன்று முற்பகல் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் மற்றும் இளம் ஊடகவியலாளர் சங்கம் என்பன ஒன்றிணைந்து முன்னெடுத்தன.

முல்லைத்தீவைச் சேர்ந்த சுயாதீன

7➤



## பயங்கரவாதத் தடைச் சட்டம் செப்டெம்பரில் இரத்தாகும்!


### சபையில் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22

பயங்கரவாதத் தடைச் சட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாத முற்பகுதிக்குள் இரத்துச் செய்யப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்

7➤

## நல்லூர் கந்தன் தீர்த்தோற்சவம்



யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோற் சவம் இன்று காலை நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு நல்லூர் கந்தனின் அருளாசி பெற்றனர்.

# நல்லூர் கந்தன் ஆலய தேர்த் திருவிழாவில் நகை திருடிய பெண் கைது!

நல்லூர், ஓக .22

வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய தேர்த் திருவிழாவின் போது நகைகளைத் திருட முற்பட்ட பெண் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

நல்லூர் ஆலய தேர்த் திருவிழா நேற்றையதினம் இடம்பெற்ற வேளையில் குறித்த பெண் பக்தர்களிடையே சந்தேகத்திற்கு இடமான வகையில் நடமாடியதை அவதானித்த சாரணர்கள் அவரைத் தொடர்ந்து கண்காணித்துள்ளனர்.

இதன்போது குறித்த பெண் ஒரு பெண்ணின் தங்கச் சங்கிலியை அறுக்க முற்பட்ட வேளையில் சாரணர்கள் அவரை மடக்கிப் பிடித்தனர்.

பின்னர் குறித்த பெண்ணை அப்பகுதியில் கடமையில் இருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் அவரைச் சோதனையிட்டபோது, அவரது உடைமைகளில் இருந்து மூன்று தங்கச் சங்கிலிகள் மீட்கப்பட்டன.

பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையின் போது,

குறித்த பெண் கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என்பது தெரிய வந்தது.

அத்துடன் குறித்த பெண்ணுடன் மேலும் சிலர் ஆலயத்திற்கு வந்திருந்தமையும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அவருடன் வந்த ஏனைய நபர்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த பெண்ணின் நடவடிக்கைகளை அவதானித்து மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சாரணர்களுக்கு, பொலிஸார் தமது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் தேர்த் திருவிழாவின் போது தமது தங்க நகைகள் திருடப்பட்டதாக 08 பேர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தபால் ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் வழங்கப்படமாட்டாது– தபால் மா அதிபர் ருவான்!

கொழும்பு, ஓக .22

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்களுக்கு இம்மாத சம்பளம் வழங்கப்படமாட்டாது என தபால் மா அதிபர் ருவான் சத்குமார தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை கடிதம் மூலம் அறிவுறுத்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் மா அதிபர் ருவான் சத்குமார தெரிவிக்கையில்,

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தபால் ஊழியர்கள் மாதாந்திர சம்பளம் பெற வேண்டுமானால் உடனடியாக கடமைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

வேலைநிறுத்தம் காரணமாக இதுவரை சுமார் 140 மில்லியன் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தநிலையில் மத்திய தபால் நிலையத்தில் குவிந்து கிடந்த தபால் பைகள் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தபால் ஊழியர்களுக்கான சம்பளம் வழங்குவதற்கு திறைசேரியிலிருந்து நிதி பெறப்பட வேண்டும். வேலைநிறுத்தத்தின்போது சம்பளக் கொடுப்பனவுகளுக்கு நிதி விடுவிக்கப்படாது என எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கடமைக்குத் திரும்பியவர்களுக்கு மட்டுமே சம்பளம் வழங்கப்பட வாய்ப்புள்ளது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இன்று கடமைக்குத் திரும்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

# இன்றும் தொடரும் தபால் ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு- மத்திய தபால் பரிமாற்றகத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு!

கொழும்பு, ஓக .22

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினரால் கடந்த 17ஆம் திகதி மாலை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று (22) ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மத்திய தபால் பரிமாற்றத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தபால் ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவு, நிர்வாக அலுவலகம் மற்றும் கணக்காய்வு அலுவலகங்களில் ஊழியர்களின் பணியை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் வெளியேறும் நேரம் என்பவற்றை கைவிரல் அடையாள இயந்திரங்களில் பதிய வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர். பணிப்புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்த கலந்துரையாடல்களில் அமைச்சர் பங்கேற்க மறுப்பதாக தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடும் தபால் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

கைரேகையை கட்டாயமாக்குதல் மற்றும் மேலதிக நேரம் தொடர்பான தீர்மானம் குறித்த முடிவை திரும்பப் பெற அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று நாடாளுமன்றில் மீண்டும் வலியுறுத்தினார்.

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை (17) முதல் ஆரம்பித்த தபால் ஊழியர்களின் வேலை நிறுத்த போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. இதனால் தபால் சேவைகளை பெற வந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.



# நாட்டில் தானிய செய்கைக்கான காப்பீட்டுத் திட்டம் அறிமுகம்

நாட்டில் பயிர் செய்கையின் பாதிப்பை நிர்வகிக்கும் செயற்பாட்டை முறைமைப்படுத்தும் நோக்கில் தானிய செய்கைக்கான காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சினால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

உளுந்து, பச்சைப் பயறு, கௌப்பி, வேர்க்கடலை, குரக்கன், கொள்ளு, சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு இந்த சலுகை காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கௌப்பி செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 4,200 ரூபாவை காப்பீடு மேற்கொள்ளும்போது, இயற்கை பேரழிவுகள், நோய்கள் மற்றும் பூச்சிகளால் ஏற்படும் பாதிப்பு மற்றும் காட்டு யானைகளால் அந்த செய்கைக்கு ஏற்படும் சேதத்திற்கு ஒரு ஏக்கருக்கு 60,000 ரூபாய் காப்பீட்டை பெற்றுக்கொள்ளமுடியும்.

இதுதவிர பச்சைப்பயறு செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 5,600 ரூபாய் காப்பீடு செய்யும் போது, ஏற்படும் பாதிப்புகளுக்கு ஒரு ஏக்கருக்கு 80,000ரூபாய் இழப்பீடாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காட்டு யானைகளால் அச்சுறுத்தல் உள்ள மாவட்டங்களிலும் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டால் இழப்பீடு வழங்கும் நோக்கில் இந்த மானிய காப்பீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# அகில விராஜ் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலை

முன்னாள் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் இன்றைய தினம் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு விசாரணை ஆணைக்குழுவின் எதிரில் முன்னிலையாகியுள்ளார். விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்கு மூலமொன்றை வழங்கியுள்ளார். கடந்த அரசாங்க ஆட்சி காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மோசடி தொடர்பிலான விசாரணைகளுக்காக அவர் இவ்வாறு முன்னிலையாகியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் புனரமைப்பு பணிகளுக்கு அரச பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் (UNP) அலுவலகத்தில் புனரமைப்பு பணிகளை இலங்கை அரசு பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் பயன்படுத்தப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அகில இன்று வாக்குமூலம் வழங்கியுள்ளார். (ஐ)

# தெமட்டகொட ருவானின் சொத்தை கைப்பற்றியது CID

கொழும்பு, ஓக .22

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினரான தெமட்டகொட ருவானுக்குச் சொந்தமான சுமார் 100 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள ஐந்து மாடிக் கட்டிடத்தை குற்றப் புலனாய்வுத் துறை (CID) கைப்பற்றியுள்ளது. போதைப்பொருள் கடத்தலில் இருந்து சம்பாதித்த பணத்தில் தெமட்டகொட ருவான் இந்தக் கட்டிடத்தை வாங்கியது தெரியவந்ததை அடுத்து, அந்தக் கட்டிடத்தை ஊஜனுயின் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவு (IAD) கைப்பற்றியது. சட்டவிரோதமாகச் சொத்து சேர்த்ததாக தெமட்டகொட ருவான், அவரது மனைவி, அவரது சகோதரி மற்றும் அவரது மகன் மீது சட்டவிரோதமாகச் சொத்து சேர்த்ததாக சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவு (IAD) முன்பு வழக்குப் பதிவு செய்திருந்தது. போதைப்பொருள் மற்றும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களால் சட்டவிரோதமாகச் சம்பாதித்ததாகக் கூறப்படும் சொத்துக்கள் குறித்த நீண்டகால விசாரணைகள் காரணமாக அந்தக் கட்டிடம் செயல்படாமல் போனதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# பொலித்தீன் உறைகளுக்குப் புதிய வரி விதிப்பு: அரசாங்கம் தீவிர கவனம்

பொலித்தீன் உறைகளைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் நோக்கில் அவற்றுக்கு புதிய வரியொன்றை அல்லது மேலதிக கட்டணம் ஒன்றை விதிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

அதன் பிரகாரம் இனி வரும் காலங்களில் பல்பொருள் அங்காடிகள் உள்ளிட்ட எந்தவொரு விற்பனை நிலையத்திலும் பொலித்தீன் உறைகள் இலவசமாக வழங்கப்பட மாட்டாது.

அதற்குப் பதிலாக கட்டணமொன்று அறவிடப்படும் சூழ்நிலை உருவாகும்.

சூழலை மாசுபடுத்தும் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறான வரி விதிப்பொன்றை மேற்கொள்வது குறித்து சுற்றாடல் அதிகார சபை, நிதியமைச்சுக்கு முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

தற்போதைக்கு குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் தீவிர கவனம் திரும்பியுள்ளது.

பொலித்தீன் உறைகளுக்கு வரி விதிப்பது தொடர்பில் தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அதற்கென புதிய சட்டங்களை உருவாக்குவது தொடர்பிலும் சுற்றாடல் அதிகார சபை முன்மொழிவொன்றைச் சமர்ப்பித்துள்ளது. (ஐ)



# யாழ்., பல்கலைக்கழக மாணவர்களின் 10 ஆவணப்படங்கள் இன்று திரையிடப்படும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள்துறை மாணவர்களால்தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் திரையிடப்படவுள்ளன.

யுத்தத்தின்போது தங்கள் அன்புக்குரிய உறவுகளை இழந்தோரின் நினைவுகளை ஞாபகப்படுத்தும் 'தடயம்'

அக்குபஞ்சர் வைத்தியமுறையின் சாதக பாதகத் தன்மைகளைகளைப் பேசும் 'அக்குபஞ்சர்',

மலையகத்தில் ஹட்டன் பிரதேசத்தில் களிமண்ணால் மேற்கொள்ளப்படும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான 'ரெரகொட்டா ஜீவல்ஸ்',

முல்லைத்தீவு குமுளமுனை கிராமத்தில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களின் கதையான 'கொலைக்களம்',

நெடுங்கேணி ஊஞ்சல்கட்டிப் பிரதேசத்தில் நிகழ்ந்துவரும் யானை மனித முரண்பாட்டை வெளிக்கொண்டுவரும் 'வேழம்',

திருகோணமலையில் வெல்கம் விகாரை வழியான சிங்கள பௌத்தமயமாக்கத்தைச் சொல்லும் 'ஈழம்',

மட்டக்களப்பு – கல்லடி பிரதேச பறங்கியர் சமூக மக்களின் வாழ்வியல் பற்றிய 'படிமம்',

மஸ்கெலியா பிரதேசசபைக்கு உட்பட்ட கிராமங்களில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் மக்கள் எதிர்நோக்கும் சவால்களை விபரிக்கும் 'லயத்துக்குயில்',

யுத்தத்தில் உடல் அங்கங்களை இழந்து சிரமத்தின் மத்தியில் அன்றாட வாழ்க்கையை வாழும் கேப்பாப்பிலவு கிராம மக்களின் பதிவான 'ரணம்',

மயானங்களில் அவை சார்ந்து சேவை வழங்கும் சாதாரண மனிதர்களின் அன்றாட வாழ்வியல் சிக்கல்களைப் பதிவு செய்யும் 'அறியாப்பாதை'

ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன. (ஐ)




# தபால் தொழிற்சங்கத்தினர் சத்தியாகிரகப் போராட்டம்!

கொழும்பு, ஓக .22

தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியினரால் கடந்த 17ஆம் திகதி மாலை ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று (22) ஐந்தாவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், தபால் தொழிற்சங்கத்தினர் சத்தியாகிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள மத்திய தபால் பரிமாற்றத்திற்கு முன்பாக இந்த சத்தியாகிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த சத்தியாகிரகத்தில் இலங்கை ஆசிரியர் சங்கம், தொழிலாளர் போராட்ட மையம் உள்ளிட்ட பல தொழிற்சங்க பிரதிநிதிகளும் பங்கேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மத்திய தபால் பரிமாற்றத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

தபால் ஊழியர்களின் மேலதிக கொடுப்பனவு, நிர்வாக அலுவலகம் மற்றும் கணக்காய்வு அலுவலகங்களில் ஊழியர்களின் பணியை ஆரம்பிக்கும் நேரம் மற்றும் வெளியேறும் நேரம் என்பவற்றை கைவிரல் அடையாள இயந்திரங்களில் பதிய வேண்டும் என்ற அறிவுறுத்தல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் உள்ளிட்ட 19 கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

பணிப்புறக்கணிப்பை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்த கலந்துரையாடல்களில் அமைச்சர் பங்கேற்க மறுப்பதாக தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடும் தபால் ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

கைரேகையை கட்டாயமாக்குதல் மற்றும் மேலதிக நேரம் தொடர்பான தீர்மானம் குறித்த முடிவை திரும்பப் பெற அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று நாடாளுமன்றில் மீண்டும் வலியுறுத்தினார்.

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை (17) முதல் ஆரம்பித்த தபால் ஊழியர்களின் வேலை நிறுத்த போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இதனால் தபால் சேவைகளை பெற வந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் பணி நியமன அணைகளை வழங்கினார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் ரூ.60.85 கோடி செலவில் 5 வட்ட செயல்முறை கிடங்குகள், 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் 2 நவீன சேமிப்புக் கிடங்குகள் ஆகியவற்றை திறந்து வைத்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் பணி நியமன ஆணைகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (22.08.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 23.27 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறை கிடங்குகள், 30.38 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் 7.20 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு நவீன கிடங்குகள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பணியாளர்களாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட 63 நபர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் 55 வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களைச் சேமித்து வைத்திடும் நோக்குடன் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கிய பங்காற்றி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து உணவு தானியங்களை நவீன முறையில் சேமித்து வைத்திடவும், அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பினை வட்ட அளவில் உறுதி செய்யவும், பொதுவிநியோகத் திட்டத்தின் பயன்பாட்டிற்கான தானியங்களின் சேமிப்பிற்கான கொள்ளளவினை அதிகப்படுத்தும் விதமாகவும், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், ஆத்துக்குறிச்சியில் 4.02 கோடி ரூபாய் செலவில் 2000 மெ.டன் கொள்ளளவிலும், மதுரை மாவட்டம், மதுரை மேற்கு வட்டம், மேலக்குயில்குடியில் 4.50 கோடி ரூபாய் செலவில் 2500 மெ.டன் கொள்ளளவிலும் உசிலம்பட்டி வட்டம்,

சீமானுத்துவில் 5.50 கோடி ரூபாய் செலவில் 3000 மெ.டன் கொள்ளளவிலும், விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை வட்டம், கங்கர்செவலில் 3.75 கோடி ரூபாய் செலவில் 2000 மெ.டன் கொள்ளளவிலும், காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், கீழ்ப்புத்தூரில் 5.50 கோடி ரூபாய் செலவில் 3000 மெ.டன் கொள்ளளவிலும், என மொத்தம் 23.27 கோடி ரூபாய் செலவில் மொத்தம் 12.500 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறை கிடங்குகள் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், திருவாதவூரில் 14.42 கோடி ரூபாய் செலவில் 15,000 மெ.டன் கொள்ளளவிலும், வாடிப்பட்டி வட்டம் குலசேகரன்பேட்டையில் 6.73 கோடி ரூபாய் செலவில் 7000 மெ.டன் கொள்ளளவிலும், கடலூர் மாவட்டம், வேப்பூர் வட்டம், டி.புடையூரில் 9.23 கோடி ரூபாய் செலவில் 9500 மெ.டன் கொள்ளளவிலும், என மொத்தம் 30.38 கோடி ரூபாய் செலவில் 31,500 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள்

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்திற்குட்பட்ட குனிச்சி கிராமத்தில் 3.60 கோடி ரூபாய் செலவில் 3400 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள ஒரு நவீன சேமிப்புக் கிடங்கு, அரியலூர் மாவட்டம் - அரியலூர் வட்டம், தேளூர் கிராமத்தில் 3.60 கோடி ரூபாய் செலவில் 3400 மெ.டன் கொள்ளளவில் கட்டப்பட்டுள்ள ஒரு நவீன சேமிப்புக் கிடங்க் என மொத்தம் 60 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வட்ட செயல்முறை கிடங்குகள், 3 நவீன நெல் சேமிப்பு வளாகங்கள் மற்றும் 2 நவீன சேமிப்புக் கிடங்குகள்



ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சார்பில் தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் ஃ உதவி சேமிப்புக் கிடங்கு மேலாளர் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 63 நபர்களுக்கும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் 55 வாரிசுதாரர்களுக்கு பட்டியல் எழுத்தர், அலுவலக உதவியாளர் / எடையாளர் ஃ காவலர் ஆகிய பணியிடங்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் திரு.அர.சக்கரபாணி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் திரு.நா.முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத் தலைவர் திரு.ப.ராங்கநாதன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அ. ஜான் லூயிஸ் இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர். ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (ஐ)





## விஜயின் கருத்துக்கு கமல்ஹாசன் பதில்

மார்கெட் போன பின்னர் அடைக்கலம் தேடி அரசியலுக்கு வரவில்லை என்று விஜய் பேசியதற்கு மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் பதிலளித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத்தின் 2 ஆவது மாநில மாநாடு நேற்று மதுரை மாவட்டம் பாரபத்தியில் நடைபெற்றது. வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் தனது கட்சியின் கூட்டணி நிலைப்பாடு தொடங்கி கொள்கை எதிரி, அரசியல் எதிரி யார், கட்சியின் திட்டம் என்ன என்று பல்வேறு விஷயங்கள் குறித்தும் அக்கட்சியின் தலைவர் விஜய் பேசினார்.

இதில் விஜய் பேசும்போது, “கூடிய சீக்கிரம் மக்களை சந்திப்பேன். அது இடி முழக்கமாக மாறும். அது போர் முழக்கமாக மாறும். நான் மார்கெட் போன பின்னர் அடைக்கலம் தேடி அரசியலுக்கு வரவில்லை. படைக்கலனுடன் அரசியலுக்கு வந்துள்ளேன். அதுமட்டுமல்ல நான் நன்றிக்கடனுக்காக அரசியலுக்கு வந்துள்ளேன். 30 வருடங்களுக்கு மேலாக என்னை நீங்கள் தான் தாங்கிப் பிடிக்கிறீர்கள். உங்களுக்காக வருகிறேன். நான் உங்களை மறக்க மாட்டேன்” என்று பேசினார்.

இந்த பேச்சு சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. மேலும் மார்கெட் போன பின்னர் அடைக்கலம் தேடி அரசியலுக்கு வரவில்லை என்று அவர் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசனைத் தான் குறிப்பிடுகிறார் என்று பலரும் விமர்சித்தனர்.

இந்த நிலையில், சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த கமல்ஹாசனிடம் விஜய்யின் இந்த பேச்சு குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதிலளித்த கமல்ஹாசன், “விஜய் யாருடைய பெயரையாவது குறிப்பிட்டு பேசினாரா? பிறகு அட்ரஸ் இல்லாத லெட்டருக்கு நான் பதில் போடலாமா? அவர் என் தம்பி” என்று தெரிவித்தார். (ஐ)




## அப்துல் கலாம் கனவில் உதித்த திட்டம் அக்னி–5 ஏவுகணை வெற்றிகரமான சோதனை

*கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி–5 ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. இந்த வெற்றியின் நாட்டின் பாதுகாப்புத்துறையில் ஒரு முக்கிய மையில் கல்லாக கருதப்படுகிறது. இஸ்ரோவின் எஸ்.எஸ்.எல்.வி. ராக்கெட் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி என் ஏவுகணை தயாரிக்க கூடாது என முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் அப்துல் கலாமின் கனவில் உதித்த திட்டம் தான் இது. அக்னி ஏவுகணையின் 5வது தலைமுறை ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. ஒடிசா மாநிலம் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் தீவில் இருந்து ஆகஸ்ட் 20ஆம் தேதி இந்த சோதனை நடத்தப்பட்டது. 5,000 கிலோமீட்டர் முதல் 7,500 கிலோமீட்டர் தூரம் வரை சென்று தாக்கம் திறன் கொண்டது.*

*ஐரோப்பா, ஆப்பிரிக்கா தூரம் வரை செல்லும் வலிமை கொண்டது இந்த அக்னி–5 ஏவுகணை. முக்கியமாக அக்னி–5 ஏவுகணையில் எம்.ஐ.ஆர்.வி. எனப்படும் ஒரே நேரத்தில் பல இலக்குகளை தாக்கம் அனபீனா தொழில் நுட்பம் இணைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் நடந்த ஆபரேஷன் சிந்தூரில் முதலில் பிரமோஸ் ஏவுகணைகள் சிறப்பாக செய்யப்பட்டது. உலக நாடுகளை ஈர்த்த நிலையில் அக்னி–5 ஏவுகணையின் சோதனை வெற்றி இந்தியாவின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதிக்கு மேலும் ஒரு உத்தியோகத்தை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்துல் கலாமின் கனவை மெய்ப்பிக்கும் விதமாக அவர் பெயரிடப்பட்ட தீவிலேயே இந்த ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது என குறிப்பிடத்தக்கது. (ஐ)*

# இன்றைய உலகில் பெண்






மாதர்கள் மானிடம் தழைக்க, இறைவன் படைத்த உயர்ந்த படைப்பினர் ஆவர். ஞாலத்தின் பொறுமையும், அழகுக் கோலத்தின் பெருமையும் பெற்ற பெண்களாலே மானிட சமுதாயம் வெற்றி நடை போடுவதை காண முடிகின்றது. உலக சரித்திரத்தில் மனிதர்களின் சுதந்திரம். உரிமைகள் சிறந்த நிலையை கடந்து வந்தமைக்கு பெண்களின் வளர்ச்சியே சான்றாகின்றது. அக்காலத்திலும், இக்காலத்திலும், எக்காலத்திலும் பெருமை சேர்த்த தரப்பினராக பெண்கள் விளங்குகின்றனர் என்றால் அது மிகையாகாது. அரசியலில் சாணக்கியம் பெற்ற பெண்கள், அறிவியலில் ஆதிக்கம் பெற்ற பெண்கள், பொருளியலில் புதுமை படைத்த பெண்கள். இலக்கியத்தில் எழுச்சி பெற்ற பெண்கள், கலைகளின் பொக்கிசமாய் விளங்கும் பெண்கள் என்றெல்லாம் மன மகிழ்ச்சியுடன் நாம் புகழ்ந்தாலும், சவால்களைக் கடந்தே பெண்கள் சாதனை புரிகின்றனர் என்பது நிதர்சனமாகும்.

**இடைக்காலத்தில் பல காரணங்களால் மாதர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியது. சமூக. அரசியல், பொருளாதார, அந்நியப் படையெடுப்புக்களால் விளிம்புநிலை பெண்களின் வாழ்க்கை பெரு இன்னல் நிறைந்ததாக மாறியது. சொத்துரிமை, பேச்சுரிமை, கல்வி, தொழில். அடிப்படை மனித உரிமைகளில் பெண்கள் சீரழிவுக்கு ஆளாகினர். சிறுவர் திருமணம், மண விலக்கு, சீதனம், உடைமை மறுப்பு. மறுமண மறுப்பு. சாதிப்பாகுபாடு, பெண்ணடிமைத்தனம் என்றெல்லாம் பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தனர், இவை ஆணாதிக்கத்தின் நிலையை சுட்டுவதாக அமைந்தன.**

அன்றைய உலகில் பெண்கள் பொதுவாக உயர்ந்த நிலை பெற்றிருந்தமையை காண முடிகின்றது. தாய்வழிக் கோட்பாட்டு அறிஞர்களின் கருத்துப்படி ஆரம்ப நாகரிக வாழ்க்கையில் பெண்கள் தலைமை தாங்கிய சமுதாயம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. சான்றாக ராகுல சங்கிருத்தியயன் என்பவரின் “வொல்கா முதல் கங்கை வரை” எனும் நூலில் ஐரோப்பிய நாகரிகம். சிந்து வெளி நாகரிகம் முதலிய நாகரிகங்களில் பெண்கள் குடும்பங்களின் தலைமைத்துவத்தை வழிநடத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.

சங்ககாலத்தில் பெண்கள் பெருமரியாதையாக நடத்தப்பட்டதாக சான்றுகள் உள்ளன. ஔவையார் முதலிய பெண்பாற்புலவர்களும். அரசியரும் சிறந்த கௌரவத்துடனும், மரியாதையாகவும் வாழ்ந்துள்ளனர். பாரி பெற்றெடுத்த அங்கவை, சங்கவை முதலான மாதர்கள் சமூகத்தில் மாண்பு பெற்றிருந்தனர். புலவர்களில் ஔவையாருக்கு தனிமரியாதை இருந்துள்ளது. அதியமான் நெடுமானஞ்சி எனும் சேரமன்னன் ஔவையாரோடு சேர்ந்து தமிழும் நீண்ட நாள் வாழ்வதற்காக அரிய மருத்துவ குணம் படைத்த மலையில் விளைந்த கருநெல்லிக்கனியை பரிசாக அளித்ததாக இலக்கியம் இயம்புகின்றது. மன்னர்களுக்கிடையே ஔவையார் தூது சென்றதாக புறநானூறு கூறுகின்றது.

சங்ககாலத்தில் பெண்கள் சவால்மிக்க வாழ்க்கை வாழ்ந்தமையையும் சான்றுகள் பல் எடுத்தியம்புகின்றன. உடன்கட்டை ஏறுதல், காளை அடக்குதல் முறையுடனான மணமுறை முதலியவற்றுடன் பரத்தமை தொழிலும் பெண்களுக்கு இழிவையே சுட்டிநிற்கின்றன. பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப் பெண்டீர் உடன்கட்டை ஏறியமை பற்றி புறநானூறு விளக்குவதுடன், பரத்தையரில் சேரிப்பரத்தை. காமப் பரத்தை, காதல் பரத்தை எனும் வகையினர் இருந்ததாகவும் இலக்கியங்கள் விளக்குகின்றன.

இடைக்காலத்தில் பல காரணங்களால் மாதர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியது. சமூக. அரசியல், பொருளாதார, அந்நியப்படையெடுப்புக்களால் விளிம்புநிலை பெண்களின் வாழ்க்கை பெரு இன்னல் நிறைந்ததாக மாறியது. சொத்துரிமை, பேச்சுரிமை, கல்வி, தொழில். அடிப்படை மனித உரிமைகளில் பெண்கள் சீரழிவுக்கு ஆளாகினர். சிறுவர் திருமணம், மண விலக்கு, சீதனம், உடைமை மறுப்பு. மறுமண மறுப்பு. சாதிப்பாகுபாடு, பெண்ணடிமைத்தனம் என்றெல்லாம் பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தனர், இவை ஆணாதிக்கத்தின் நிலையை சுட்டுவதாக அமைந்தன.

சோழர்காலத்தில் பெண்கள் யர்நிலை பெற்றிருந்தமைக்கு இராஜராஜ சோழன் தமக்கையாரான குந்தவையின் ஆலோசனையின் பேரில் ஆட்சி நடத்தியமையும், சைவத்தைக் காக்க தஞ்சைப் பெருங்கோவில் போன்ற திருத்தலங்களை அமைத்து அறப்பணி ஆற்றியமையும் தக்க சான்றுகளாம். ஆனால் சோழர்காலத்தில் பெண்கள் அவமரியாதை பெற்றமைக்கு இக்கால ஔவையார் பாடிய “தையல் சொல் கேளேல்” எனும் செய்யுள் அடி சான்றாகின்றது. அத்துடன் பெண்கள் கலைகளின் நிமித்தம் அடிமைகளாக நடத்தப்பட்டமையும் சோழர்கால இலக்கியங்களில் அறியக்கிடக்கின்றது. நடனத்தொழிலுக்குரிய மாதர்கள், கோவிலுக்கு தொண்டாற்றும் குடும்பத்தைச் சேர்ந்த மாதர்கள் என்றெல்லாம் பல வகை அடிமைகளாக பெண்கள் இருந்துள்ளனர்.


இடையில் தோன்றிய பழமொழிகள் பல் பெண்களை இழிவுபடுத்துவதைக்காணலாம். “பெண்புத்தி பின்புத்தி”, “அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?” “பொம்பிள சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்ச ஆச்சு” என அவை அமைகின்றன. பெண்களை பாலினத்தின் அடிப்படையில் பாகுபாடு பார்க்கும் நிலையில் கொடுமையானது. இந்தியாவில் பெண் குழந்தைகள் கள்ளிப்பால் கொடுத்து கொல்லப்படும் நிலை இன்றும் மதுரை போன்ற பழங்கிராமங்களில் இல்லாமல் இல்லை. இந்தியாவில் மாமியார் கொடுமை, சீதனக் கொடுமை, உத்தரப் பிரதேசத்தில் தலித் இனப்பெண்கள் மீதான பாலியல் கொடுமை என்றெல்லாம் எம்மால் அடுக்கிக் கொண்டே போகுமளவுக்கு பெண்களின் நிலை மோசமாகத்தான் இருக்கின்றது.



இன்றைய நிலையில் பெண்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள், அவர்கள் அடைந்த சாதனைகள் என்பவற்றை நாம் ஆராய முன்னர் பெண்கள்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# காசா நகரை கைப்பற்றுவதற்கான நடவடிக்கை தீவிரம்: வான்வழித் தாக்குதலை தீவிரப்படுத்திய இஸ்ரேல் படைகள்



காசா நகரை கைப்பற்றுவதற்கான புதிய ராணுவ நடவடிக்கைகளை தொடங்கி உள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. ஹமாஸ் அமைப்பின் முக்கிய கோட்டையாக கருதப்படும் காசா நகரை குறிவைத்து இஸ்ரேல் வான்வழி மற்றும் பீரங்கி தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளது.

இந்த புதிய தாக்குதல்கள் அங்கிருந்த ஆயிரக்கணக்கான மக்களை இடம்பெயர செய்திருந்த நிலையில் மனிதாபிமான நெருக்கடி நிலையை மேலும் மோசமாக்கும் என ஐநா கவலை தெரிவித்துள்ளது. பிணை கைதிகள் விடுவிப்பு மற்றும் போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் தொடரும் நிலையில் இந்த ராணுவ நடவடிக்கை மேலும் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.


## அமெரிக்க உளவு துறையில் பணியாளர்கள் குறைப்பு: இயக்குனர் துளசி கப்பார்ட் நடவடிக்கை



அமெரிக்க தேசிய உளவு துறையில் பணியாளர்களை குறைத்து அதன் தலைவர் துளசி கபார்டு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார். அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றது முதல் ஆட்குறைப்பு,நிதி ஒதுக்கீடு குறைப்பு உள்பட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். இந்த நிலையில் தேசிய புலனாய்வு துறையில் பணியாளர்கள் திடீரென குறைக்கப்பட்டுள்ளது. அதே போல் உளவு துறைக்கான வருடாந்திர பட்ஜெட்டும் குறைக்கப்பட்டுள்ளது.

தேசிய புலனாய்வு துறை இயக்குனர் துளசி கப்பார்ட் கூறுகையில்," கடந்த 20 ஆண்டுகளில் புலனாய்வு துறை திறமையற்றதாக மாறி விட்டது. அதிகார துஷ்பிரயோகம், அங்கீகரிக்கப்படாத கசிவுகள், அரசியல் மயமாக்கல் என பல்வேறு சீர்கேடுகள் ஏற்பட்டு விட்டது. எனவே இந்த துறையை மறுசீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக 40மூ க்கும் அதிகமான பணியாளர் குறைக்கப்படுகின்றனர். வருடாந்திர பட்ஜெட் ஒதுக்கீடும் ரூ.61 ஆயிரம் கோடி குறைக்கப்பட்டுள்ளது" என்றார்.(ஐ)

## இருதரப்பு உறவு குறித்து ஆலோசனை ரஷ்ய அதிபர் புடினுடன் ஜெய்சங்கர் சந்திப்பு



வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் புடினை சந்தித்து பேசினார். ரஷ்யாவிடமிருந்து அதிகளவு கச்சா எண்ணெய் வாங்குவதால் இந்தியாவுக்கு அமெரிக்கா கூடுதலாக 25 சதவீத வரி விதித்துள்ளது. மேலும், உக்ரைன் போரை நிறுத்த ரஷ்யாவுக்கு அழுத்தம் தரவே இந்தியாவுக்கு மொத்தம் 50 சதவீத வரி விதிக்கப்பட்டதாக அமெரிக்கா கூறி உள்ளது. இந்த சூழலில், ரஷ்யா சென்றுள்ள வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை சந்தித்து பேசினார்.

இதில், இருதரப்பு உறவுகளை மேலும்விரிவுபடுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. அமெரிக்கா எதிர்த்தாலும் இந்தியாவுக்கு தொடர்ந்து சலுகை விலையில் கச்சா எண்ணெய் விநியோகிக்கப்படும் என ரஷ்யா கூறியிருக்கும் நிலையில், இந்த சந்திப்பு நடந்துள்ளது. மேலும், வரும் நவம்பர் அல்லது டிசம்பரில் புடின் இந்திய பயணம் மேற்கொள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடாக ஜெய்சங்கர் அவரை சந்தித்து பேசி உள்ளார். (ஐ)

## கொலம்பியாவில் வெடிகுண்டுகள் நிரப்பிய லாரியை மோதி நடத்திய தாக்குதலில் 5 பேர் பலி



கொலம்பியாவில் வெடிகுண்டுகள் நிரப்பிய லாரியை மோதி நடத்திய தாக்குதலில் 5 பேர் உயிரிழந்தனர். கொலம்பியாவில் காலி நகரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் மேலும் 36 பேர் படுகாயமடைந்தனர். காலியில் உள்ள விமான நிலையத்தை குறிவைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாக போலீஸ் தகவல் அளித்துள்ளது. (ஐ)

## இந்தியாவை கூட்டாளியாக நடத்த வேண்டும்: குடியரசு கட்சி தலைவர் நிக்கி ஹேலி கருத்து



இந்தியாவை பெருமைமிகு சுதந்திர ஜனநாயக கூட்டாளியாக நடத்த வேண்டும் என குடியரசு கட்சியின் தலைவர்களில் ஒருவரான நிக்கி ஹேலி வலியுறுத்தியுள்ளார். ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதன் மூலம் உக்ரைன் போருக்கு இந்தியா மறைமுக நிதி அளிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது. இதனால் ரஷ்ய கச்சா எண்ணெயை இறக்குமதி செய்யும் இந்தியா மீது கூடுதலாக 25 மூ வரி மற்றும் அபராத வரி 25 மூ என மொத்தம் 50 மூ வரியை விதித்துள்ளது.

இந்தநிலையில் தெற்கு கரோலினா முன்னாள் கவர்னரும்,குடியரசு கட்சி தலைவர்களில் ஒருவருமான நிக்கி ஹேலி, அமெரிக்க பத்திரிகையில் கட்டுரை எழுதியுள்ளார்.அதில் குறிப்பிட்டுள்ளதாவது: சீனாவை எதிர்கொள்ள இந்தியாவை மதிப்புமிக்க சுதந்திரமான மற்றும் ஜனநாயக பங்காளியாக கருத வேண்டும். இந்தியா உடனான 25 ஆண்டுகால உந்துதலைக் குறைப்பது ஒரு மூலோபாய பேரழிவாக இருக்கும்.ஜனநாயக இந்தியாவின் எழுச்சி கம்யூனிஸ்ட் கட்டுப்பாட்டில் உள்ள சீனாவைப் போலல்லாமல் சுதந்திர உலகத்தை அச்சுறுத்துவதில்லை.

அமெரிக்கா தனது முக்கியமான விநியோகச் சங்கிலிகளை பீஜிங்கிலிருந்து நகர்த்த உதவும் பொருட்களை சீனாவைப் போலவே உற்பத்தி செய்யும் திறன் இந்தியாவுக்கு இருக்கிறது. இந்தியாவின் வளர்ந்து வரும் பாதுகாப்புத் திறன்களும் மத்திய கிழக்கில் அதன் ஈடுபாடும் பிராந்தியத்தை நிலைநிறுத்துவதற்கு அவசியமானது.

இந்தியா உலகின் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதாரம்.விரைவில் அது ஜப்பானை முந்திவிடும். இந்தியாவின் எழுச்சி உலகளாவிய ஒழுங்கை மறுவடிவமைக்கும் சீனாவின் இலக்கிற்கு மிகப்பெரிய தடையாக இருக்கிறது. சீனாவை எதிர்கொள்ள இந்தியாவை மதிப்புமிக்க சுதந்திரமான மற்றும் ஜனநாயக பங்காளியாக கருத வேண்டியது அவசியம். இவ்வாறு அதில்குறிப்பிட்டுள்ளார்.(ஐ)

## மே 9 கலவர வழக்கில் இம்ரான்கானுக்கு ஜாமீன்



மே 9 பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் கடந்த 2023ம் ஆண்டு மே 9ம் தேதி ஊழல் வழக்கில் கைது செய்யப்பட்டார். இதை தொடர்ந்து இம்ரானின் கட்சி தொண்டர்கள் நாடு முழுவதும் கலவரத்தில் ஈடுபட்டனர். லாகூரில் உள்ள ராணுவ முகாம் பகுதியில் புகுந்த அவரது கட்சி தொண்டர்கள் ராணுவ தளவாடங்களை அடித்து நொறுக்கினர். ராணுவ அதிகாரிகளின் வீடுகளையும் அடித்து சேதப்படுத்தினர். இது தொடர்பான வழக்கில் இம்ரான் கானுக்கு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது. (ஐ)

## பயங்கரவாத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார். இன்றைய நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி ரியன்சி அர்சகுலரத்ன தலைமையிலான குழுவின் அறிக்கை அடுத்த மாத தொடக்கத்தில் கிடைக்கும்.

அதற்கமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிப்பதற்கான வர்த்தமானி அடுத்த மாத ஆரம்பத்தில் வெளியிடப்படும்.

நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான புதிய சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக இயற்றப்படும்.” - என்றார்.

## சாமர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சொத்துக்கள் மற்றும் உடைமைகள் தொடர்பான விசாரணைப் பிரிவில் முன்னிலையாகிய போது அவரிடம் 6 மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

சாமர சம்பத் தசநாயக்க நேற்று பிற்பகல் 12.30 மணிக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகிய நிலையில் மாலை 5.30 மணிக்கு அங்கிருந்து வெளியேறினார்.

அவர் நிதி முறைகேடுகள் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்கினார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளரான க.குமணனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கடந்த 17ஆம் திகதி அளம்பில் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து சுமார் 7 மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர். இதனைக் கண்டித்தும், தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநுர அரசின் அடக்குமுறையைக் கண்டித்தும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் ஊடகவியலாளர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம்!

பருத்தித்துறை பகுதியில் அமைந்துள்ள சில இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபை தவிசாளர் தலைமையில் வர்த்தகர்கள் பொதுமக்களை ஒன்றிணைத்து எதிர்வரும் 25ஆம் திகதி குறித்த போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் பருத்தித்துறை நகர சபை மண்டபத்தில், நகர சபை தவிசாளர் டக்ளஸ் போல் தலைமையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த போராட்டம் 'பருத்தித்துறை நகரை பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ள போராட்டம், பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை சென்று மகஜர் ஒன்றும் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதை நிறுத்துமாறு கோரி இன்று போராட்டம் முன்னெடுப்பு!

வடக்கு - கிழக்கு ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுவதை நிறுத்துமாறு கோரி ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம் மற்றும் இளம் ஊடகவியலாளர் சங்கம் என்பன ஒன்றிணைந்து இன்றைய தினம் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அநுர அரசாங்கத்தின் அடக்குமுறையை கண்டித்து நாடாளுமன்ற சுற்றுவட்டத்துக்கு முன்பாக இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 17ஆம் திகதி முல்லைத்தீவைச் சேர்ந்த சுயாதீன ஊடகவியலாளரான க.குமணனைப் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அளம்பில் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைத்து சுமார் 7 மணி நேரம் கடுமையான விசாரணைக்கு உட்படுத்தியிருந்தனர்.

அத்துடன் மேலதிக விசாரணைகளுக்கு அழைக்கப்படும் போது, முன்னிலையாக வேண்டும் எனவும், விசாரணை விடயங்கள் தொடர்பில் வெளியில் கூறக் கூடாது எனவும் கடுமையாக அறிவுறுத்தியே குமணன் விடுவிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரணில் கைது கடுமையாக சாடினார் சஜித்



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையான பதிவொன்றை இட்டுள்ளார். அந்த பதிவில்... யூடியூபர் ஒருவர் முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கைது செய்யப்படுவார் என்பது நடப்பதற்கு முன்னமே எதிர்வு கூறுவது ? இது வெறும் தற்செயல் நிகழ்வாக இருக்க முடியாது, இது ஒரு திட்டமிட்ட நிகழ்வாக அமைந்திருக்க முடியுமா? அது உண்மையாக இருந்தால், சட்டம் ஒழுங்கு போன்ற உன்னதமானதொரு விடயம் மலிவான நாடகக் காட்சியாக மாறும் அந்நாள் மோசமானதொரு நாளாகும். என குறிப்பிட்டுள்ளார்

## யாழில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கமைய இன்று நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுப் பொதிகள் மீட்கப்பட்டன.

அந்தப் பொதிகளில் இருந்து ரி - 56 ரக துப்பாக்கிகள் 30 மற்றும் அவற்றுக்குரிய 5 ஆயிரம் ரவைகள் மீட்கப்பட்டன.

குறித்த ஆயுதங்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

# யாழில் மீட்கப்பட்ட துப்பாக்கிகள்!

யாழ்ப்பாணம், கொட்டடி பகுதியில் 30 துப்பாக்கிகள் வரையில் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம்கொட்டடி பகுதியில்உள்ள அருள்ராஜசிங்கம் அங்கஜன் என்பவரின் வீட்டில் மலசலகூடத்திற்கான குழி வெட்டுவதற்காக முற்பட்டபோது, சந்தேகத்திற்கிடமான பொருள் காணப்பட்டதை அடுத்து, பொலிஸார் ஊடாக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா தலைமையில் குறித்த பகுதியில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது 30 வு-56 ரக துப்பாக்கிகளும், அவற்றிற்கு பயன்படுத்தப்படும் 5,000 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆயுதங்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த விவகாரம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எறிதல் சம்பியன்ஷிப் போட்டி- ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற இலங்கையர்!

எறிதல் சம்பியன்ஷிப் போட்டி தென் கொரியாவில் நடைபெற்று வருகின்றது.

தென் கொரியாவில் நடைபெற்றுவரும் எறிதல் சம்பியன்ஷிப் போட்டியில் இன்று (22) நடைபெற்ற ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த ருமேஷ் தரங்க தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

ருமேஷ் தரங்க 82.05 மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இந்த போட்டியில் ஜப்பானிய தடகள வீரர் 78.60 மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து வெள்ளிப் பதக்கமும், பாகிஸ்தானிய தடகள வீரர் 77.43 மீட்டர் தூரம் ஈட்டி எறிந்து வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

இதனிடையே, பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த நதீஷா 57.53 மீட்டர் தூரத்திற்கு ஈட்டி எறிந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இது அவரது தனிப்பட்ட புதிய அதிகபட்ச செயல்திறனாக கருதப்படுகின்றது.

## யாழ். செம்மணி அகழ்வு நடவடிக்கை விவகாரம்– ஒத்திவைக்கப்பட்ட வழக்கு விசாரணை!

யாழ். செம்மணி, சித்துப்பாத்தி மனிதபுதைகுழியின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு இன்றையதினம் (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி எதிர்வரும் 25ஆம் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

செம்மணி - சித்துப்பாத்தி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக 45 நாட்கள் வழங்கப்பட்ட நிலையில், 32 ஆவது நாளுடன் குறித்த அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த அகழ்வாய்வின் போது 147 என்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன், 133 என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய உலகில்....

பெற்றிருந்த இறுக்கமான சூழ்நிலையை எம்மால் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்திய தேசத்தில் பாரதியார் தோன்றி பெண்ணடிமைக்கு எதிராக பேசும் வரை இந்திய தேசம் பெண்களை கண்டு கொள்ள வில்லை. எரிமலைக் கவிஞரான சுப்பிரமணியப் பாரதியார் பெண்ணடிமையை நீக்குவதைப் பற்றி பல கவிதைகளில் விளக்கியுள்ளார். புதுமைப்பெண், பெண் விடுதலைக் கும்மி, பெண்மை, பாஞ்சாலி சபதம். எனப் பல தரப்பட்ட கவிதைகளில் பெண்ணைப் பற்றிப் பாடியுள்ளார். “நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் -ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்களின் குணங்களாம்” என்றும் பாரதியார் பாடியதைக் குறிப்பிடலாம். ஆணும் பெண்ணும் நிகராக நடத்தப்பட வேண்டும். கற்பு ஆணுக்கும். பெண்ணுக்கும் பொதுவானது. பெண்ணாக விளங்குவது அன்னை பராசக்தி என்றும் கடவுளின் நிலையைக் கொடுத்த பாரதியார் போற்றியுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

எம்ஈழத்திருநாட்டிலும்பெண்பெருமை பேசும்இலக்கியப் படைப்புக்கள் எழுந்துள்ளதை திருகோணமலையைச் சேர்ந்த தி.த சரவணமுத்துப் பிள்ளை எனும் அறிஞர் பாடிய “தத்தை விடுதூது” மூலம் “பெண்ணைக் கூட்டிற் பசுங்கிளி போல் பூட்டி வைத்தார்...” எனும் வரிகளும், வ.அ இராசரெத்தினம் படைத்த ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது எனும் நாவல் வலியுறுத்தும் பெண் கல்வி பற்றிய செய்தியும் உறுதிப்படுத்துகின்றன.

பெண்களை போற்றும் நிலையில் இன்று மகளிர் தினம் அன்னையர் தினம் என பல சிறப்பு தினங்கள் கொண்டாடப்படுகின்றன. பெண்கள் இன்று விண்வெளியில் சாதிப்போராகவும், நோபல் பரிசை வென்றெடுப்போராகவும். உலக நாடுகளின் தலைவர்களாகவும், சட்டத்துறை வல்லுனர்களாகவும், அறிவியல் மேதைகளாகவும் திகழ்வதை காண முடிகின்றது. இந்திய விண்வெளி வீராங்கனைகளான மரணித்த கல்பனா சௌலா எனும் பெண்மணியும். சுனிதா வில்லியம்ஸ் ஆகியோரும், ரஸ்யாவின் வெலன்ரீனா தெரஸ்கோவா எனும் பெண்ணும் விண்வெளியில் சாதித்தமை சிறப்பிற்குரியது. இமய மலையின் சிகரத்தைத் தொட்ட யுங்கொ இசுவசி எனும் யப்பானியப் பெண்ணும், நோபல் பரிசு வென்றெடுத்த மேரி ஹியூரி, அன்னை தெரேசா, கொங்சாங் சூகி போன்றோரும், தற்கால அவுஸ்ரேலியா, நியுசிலாந்து. பங்களாதேஷ். தென்கொரியா. பிறேசில் நாட்டுத் தலைவர்களாக பெண்கள் விளங்கி அரசியலில் சாதித்தமையும், பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை பெற்ற தேசமாக எம் நாடு விளங்குவதையும். உலகத்தின் முதல் பெண் பிரதமரான ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க எமது நாட்டவர் என்பதும் பெருமைக் குரியது.

எனவே “பெண்கள் நாட்டின் கண்கள்” என்பதற்கிணங்க, பெண்களின் எழுச்சி முழு உலகின் எழுச்சி எனவும், பெண்களின் வீழ்ச்சி முழு உலகின் வீழ்ச்சி எனவும் விளங்கி மானிடர்களாகிய நாம் ஆணையும். பெண்ணையும் சமமாக மதித்து வாழ தலைப்படுவோமாக.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.08.2025 வெளியிடப்பெற்றது.